BRITISH COUNCIL

# பிரிட்டிஷ் கவுன்ஸிலின் கற்றல் மைய மன்றத்தை அணுகுதல்

ஆங்கில மற்றும் இடைநிலை மாணவர்களுக்கான ஆங்கில கற்கை நெறிகள்

# மன்றங்களைப் பயன்படுத்துவதற்கான விதிகள்

கற்பிக்கப்படும் பாடத் தலைப்புகள் மற்றும் பொதுவான ஆங்கிலக் கல்வி சம்பந்தமான யோசனைகள் மற்றும் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளவும் அவை பற்றிக் கலந்துரையாடவும் ஆசிரியர்களும் மாணவர்களும் மன்றங்களைப் பயன்படுத்த முடியும். மன்றங்களை மாணவர்கள் தாமாகவே ஆரம்பிக்க முடியாது. ஆனால், அவர்கள் தமது ஆசிரியரினால் ஆரம்பிக்கப்படும் உரையாடல்களுக்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துகள், பொருத்தமான உருவப்படங்கள் மற்றும் URLகளை இடுகை செய்யலாம். மற்றைய மாணவர்களின் இடுகைகளுக்கும் அவர்கள் பதிலளிக்கலாம். மன்றங்களைப் பயன்படுத்தும்போது மாணவர்கள் பின்வரும் விதிகளை அனுசரிக்க வேண்டுமென நாம் கேட்கின்றோம்:

- மன்ற இடுகைகள் அனைத்தும் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும். வேறேதும் மொழியில் சமர்ப்பிக்கப்படும் கருத்துகள் நீக்கப்படும்.
- மின்னஞ்சல் முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் "தகாத அல்லது அவதூறான" மொழி அனுமதிக்கப்பட மாட்டாது.
- ஏதேனும் கோப்பு பகிர்வு வலைத்தளங்களிற்கான இணைப்புகளை மாணவர்கள் இடுகையிடக் கூடாது. அத்தகைய இணைப்புகள் நீக்கப்படும்.
- மன்றத்திலுள்ள ஏதேனும் விடயம் அல்லது இடுகைகள் குறித்து மாணவர்களுக்கு ஏதேனும் பிரச்சினை இருந்தால், அவர்கள் அதனை உடனடியாக தமது ஆசிரியருக்கு அறிவிக்க வேண்டும்.
- மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்கத் தவறினால், சம்பந்தப்பட்ட மாணவர் விலக்கப்படலாம் அல்லது இடைநிறுத்தப்படலாம்.

மேலுள்ள விதிகளும் பிரிட்டிஷ் கவுன்ஸிலின் கொள்கைகளும் அனுசரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக சகல மன்றங்களும் கிரமாகக் கண்காணிக்கப்படும்.

☐ இப் பெட்டியினுள் அடையாளமிடுவதன் மூலம் இந்த விதிகளை அனுசரித்து நடக்க நானும் எனது பிள்ளையும் இணங்குகின்றோம்.